# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

## செய்தி தகவல்

செய்தி தகவல் எண்.5/2016 நாள் 03.08.2016

**ஊராட்சி வாக்காளர் பதிவு அலுவலர்கள் நியமனம்**
(Panchayat Electoral Registration Officers)

1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 30(2)ன் படியும், 1995ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளின் விதி எண்.7ன் படியும், 2016ல் ஊராட்சி தேர்தல்களை நடத்திட ஏதுவாக, அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்களும் (வட்டார ஊராட்சி), தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் ஊராட்சி வாக்காளர் பதிவு அலுவலர்களாக (Panchayat Electoral Registration Officers) நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கான ஆணையினை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் சட்டபூர்வ ஆணை எண். 4/2016/தநாமாதேஆ/ஊதே1, நாள் 02.08.2016ல் வெளியிடப்பட்டுள்ளது.

மாநில தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் கட்டுப்பாட்டிற்குட்பட்டு இவ்வாக்காளர் பதிவு அலுவலர்கள், புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல்களை தத்தமது அதிகார எல்லையிலுள்ள பகுதிகளுக்கு, வரையறுக்கப்பட்ட முறையில், வார்டுவாரியாக தயாரித்து, வெளியிடுவார்கள்.

இத்தகவல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

03/08/16
மக்கள் தொடர்பு அலுவலர்